முருகப்பெருமான் துணை

**மகான் அமர்நீதி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.09.2023**, திங்கட்கிழமை

1. அவதார ஞான வள்ளலே
அண்ணலே ஞான தேசிகனே
அவனிகாக்க ஞானியாக வந்த
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசிதனை
குறையிலா சோபகிருது நங்கை திங்கள்
தெரியவே முதல் திகதி சோமவாரம்
*(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் முதல் நாள், 18.09.2023, திங்கட்கிழமை)*
தேசிகன் கேட்க அமர்நீதி நாயனார் யானும்
3. யானும் அரங்கமகான் படைகள்
உலகமெல்லாம் பெருக உரைப்பேன்
ஞானமாக உலகமக்கள் தனக்கு
நம்பிக்கையூட்டி அருளுகின்ற
4. அருளுகின்ற அரங்கமகான் வழி
ஆபத்தை வெல்லுகின்ற வழி
இருளெனும் அறியாமை போக்கி
எல்லோருக்கும் தெளிவு தருகின்ற வழி
5. வழிதனை வழிமொழிந்து மக்கள்
வணங்கி வர மாற்றம் தானும்
அழியாமை எனும் மகா சக்தியாக
அறமாகப் பெருகி வர
6. வருகவே எங்கிலும் அரங்கன்படை
வளர்ந்தோங்கி மாற்றம் காணும்
முருகப் பெருமானை வணங்கி
முழுமையான சக்திபலம் கூடி

7. கூடியே உலக மக்களிடையே
குருவருள் திருவருளாக மாறியே
இடர்வெல்லும் அற்புதம் நிகழும்
எல்லாம் அரங்கனால் நடக்கும்
8. நடக்கவே கலியுக மக்கள்
ஞான வழித் தேடி எங்கும் அலையா
தடையற பிரணவக்குடிலனுகி
தவராஜனை தரிசணம் காண
9. காணவே வேலவன் அருளை
கந்தப் பெருமான் காட்சியை
ஞானமாக அறமாக வரமாக
ஞானதேசிகனரால் அடைய முடியும்
10. அடையவே அரங்கமகானால்
அற்புதம் பலபல நடக்க விருக்க
சோடை நீங்கி உலகம் பாதுகாப்பு
செழுமையும் கண்டு சிறக்க
11. சிறக்க சைவ நெறி சித்தநெறி
சிவநெறி ஏற்று வருக
சிறக்கும் உலகினில் ஞான ஆட்சி
செப்பிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—